## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.6/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கன்னியப்பன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தன் | ஜாதி | : -- |
| வயது | : 80 | கிராமம் | : செருக்கனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**23.07.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் திருத்தணி ஜோதி நகரில் இருந்துதான் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் நான் செருக்கனூரில் இருந்துதான் வருகிறேன். ஜோதிநகரில் என் பிள்ளைகள் உள்ளார்கள். ஜோதி நகரில் யார் யார் உள்ளார்கள் என்றால் பூஷணம், ராமன், லட்சுமணன் ஆகிய 3 பிள்ளைகள் திருத்தணி ஜோதி நகரில் உள்ளார்கள். எனக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 15 பிள்ளைகள் ஆவார். இறந்தது போக 8 பிள்ளைகள் உயிருடன் உள்ளார்கள். நான் முதியோர் உதவித்தொகை பெறுகிறேனா என்றால் ஆமாம். நான் செருக்கனூரில் பழைய காலனியின் வசிக்கும் வீடு ஓட்டு வீடா என்றால் கூரை வீடு ஆகும்.

2. அந்த பழைய காலனியில் உள்ள கூரை வீட்டில்தான் ஆதார் அட்டை, முதியோர் உதவி தொகை அட்டை ஆகியவை உள்ளது என்றால் ஆமாம். நான் என் மனைவியும் தனியாக குடிசை வீடு கட்டிக்கொண்டு இருக்கிறோம் என்றால் ஆமாம். அது எந்த இடம் என்றால் பாறை இடமாகும். அது இந்த வழக்கு சொத்தா அல்லது வழக்கில் இல்லாத சொத்தாகும். இதை தவிர வேறு எந்த சொத்தும் என் பெயரில் வாங்கினேனா என்றால் இல்லை. பழைய காலனியில் உள்ள வீட்டிற்கும் பாறை அருகில் உள்ள குடிசை வீட்டிற்கும் என் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஆமாம். என் வீட்டின் தெருவின் பெயர் பஜனை கோயில் தெருவா என்றால் பழைய வீடு

பஜனை கோயில் தெருவாகும். புது வீடு எங்குள்ளது என்றால் புது காலனியில் உள்ளது. அது எந்த தெரு என்றால் பள்ளிக்கூடத்திற்கு நேர் தெருவாகும்.

3. அந்த வீட்டின் நான்கு பக்க எல்லைகள் தெரியுமா என்றால் கிழக்கே லலிதா வீடு, மேற்கே ராஜி வீடு, வடக்கு பக்கம் ராஜி ஆவார், தெற்கு ரோடு உள்ளது. **(சாட்சி பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** வடக்கு பக்கம் கொங்காமுடு குடும்பம் உள்ளது. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதி அவரிடத்திலும் நான் என் இடத்திலும் உள்ளதாகவும் எனக்கும் வாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது குடிசை வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. மண் எண்ணெய் விளக்கு (புட்டி விளக்கு) தான் வைத்துள்ளேன். வழக்கு சொத்தில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் சதாசிவம் வீடு கட்டி எனக்கு தெரியாமல் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாமல் மின் இணைப்பு பெற்றுவிட்டார். தற்போது பிரித்து கொண்டுபோய் தள்ளி வீடு கட்டியுள்ளார்.

4. தள்ளி வீடு கட்டியுள்ள சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண் தெரியாது. அவர் வீடு சாலைக்கு எந்த பக்கம் என்றால் தெற்கே ஆகும். நான் வசிக்கும் வீட்டின் புல எண் என்ன என்றால் புல எண்.26 ஆகும். புல எண்.24, 25, 27க்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். சொத்தில் நானும் என் மனைவியும் குடிசை வீடு கட்டி வாழ்வதை காட்ட ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் சதாசிவம்தான் உள்ளார் என்றாலும் அவ்வாறு வழக்கு சொத்தில் நான் இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவர் குடும்பத்தோடும் குழந்தையோடும் வந்து என்னை கையெடுத்து கும்பிட்டு கேட்டார். அதனால் நான் வீடு கட்டிக்கொள் என்று சொன்னேன்.

5. வழக்கு சொத்தில்தான் சதாசிவம் குடிசைவீடும் எரிந்து போனது என்றாலும் அவரது மகளும் எரிந்துவிட்டார் என்றாலும் சரிதான். குடிசை வீடு எரிந்து போன போது காவல்துறையினரும் வருவாய் துறையினரும் வந்து பார்த்தார்களா என்றால் அதற்கு முன்பே அதை அவர்கள் எடுத்து போட்டுவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் காவல்துறையினரும் வருவாய் துறையினரும் வந்து பார்த்து சதாசிவத்திற்கு நஷ்ட ஈடு கொடுத்துள்ளனர் என்றால் இல்லை. புதிய காலனி

தங்கவேலிடம் நான் இடம் வாங்கியுள்ளேனா என்றால் தங்கவேலு உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். நான் அங்கு இருந்தேன் அதனால் அவர் எனக்கு எழுதிகொடுத்துள்ளார்.

6. வழக்கு சொத்திற்கு மேற்கே தங்கவேல் இடம் என்றால் சரிதான். தங்கவேல் கொடுத்த இடத்தில் நான் தற்போது என்ன கட்டியுள்ளேன் என்றால் மாடு கட்டியுள்ளேன். தங்கவேல் இடம் என் இடத்திற்கு மேற்கே என்றால் ஆமாம். வாதி வசித்து வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் வேறு என்றாலும் நான் வசிக்கும் இடம் வேறு என்றாலும் இரண்டிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரிதான். வாதி வசிக்கும் இடத்திற்கு தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை என்றால் ஆட்சேபணை இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 ஆவணம் 2008ம் ஆண்டுக்குரியது என்றாலும் அது வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாதது என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 3 ஆவணம் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாதது என்றால் சரிதான். சம்மந்தமில்லை. வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

(மறு விசாரணை இல்லை)